# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

## 1986 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க,

## காப்புறுதிக் கட்டுப்பாடு (திருத்தச்) சட்டம்

---

*[1986, திசெம்பர் மாதம் 02 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1986, திசெம்பர் மாதம் 05 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 1.80 தபாற் செலவு : ரூபா 1.15

## 1986 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க காப்புறுதிக் கட்டுப்பாடு (திருத்தச்) சட்டம்

[1986 திசெம்பர் 02 ஆம் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 38/85

1795அ

### 1962 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, காப்புறுதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம், 1986 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, காப்புறுதிக் கட்டுப்பாட்டு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், கசற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

1962 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

2. இதனகத்துப்பின்னர் "மூதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் 1962 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க காப்புறுதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகிறது :—

"இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஆட்களினால் மட்டுமே காப்புறுதித் தொழில் நடத்தப்படுதல்.

4. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, இப்பிரிவு நடைமுறைக்குவரும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும், ஆள் எவரும், அத்தகைய ஆள் காப்புறுதித் தொழிலைக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக மட்டுமே 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டும், பதிவுசெய்யப்பட்டும், அத்துடன் இலங்கையில் காப்புறுதித் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுமுள்ளதென இச்சட்டத்தின்கீழ் அப்போதைக்குப் பதிவு செய்யப்பட்டும் உள்ள கம்பெனியொன்றாக இருந்தாலொழிய, எவ்வகுப்பினதான காப்புறுதித் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்குத் தொடங்குதல் ஆகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகிறது :—

"பதிவுக்கென விண்ணப்பிக்கும் கம்பெனியொன்றின் தேவைப்பாடுகள்.

5. (1) கம்பெனி எதுவும்—

(அ) அத்தகைய கம்பெனி, 1981 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டும் அத்துடன் அச்சட்டத்தின் 30 ஆம் பிரிவில் வரைவிலக்கணங் கூறப்பட்டவாறு தனியார் கம்பெனி ஒன்றாக அல்லாமலும் ; அத்துடன்

(ஆ) (i) அத்தகைய கம்பெனி கொண்டு நடாத்துவதற்கு உத்தேசித்துள்ள காப்புறுதித் தொழில், ஆயுட் காப்பீட்டுத் தொழிலை மட்டுமே கொண்டதாகவிருக்குமிடத்து, இரண்டரைக் கோடி ரூபாவுக்குக் குறையாதது ;

(ii) கொண்டு நடாத்துவதற்கு உத்தேசித்துள்ள காப்புறுதித் தொழில் ஆயுட்காப்பீட்டுத் தொழில் அல்லாது வேறு எதேனும் வகுப்பினதாக அல்லது வகுப்புகளினதாக இருக்குமிடத்து, ஐந்து கோடி ரூபாவுக்குக் குறையாததும் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தைக் கொண்டதாக

இருந்தாலொழிய, இலங்கையில் காப்புறுதித் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளதாக இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்படலாகாது ; அத்துடன்

(2) ஓராம் உட்பிரிவிலுள்ள எது எப்படியிருப்பினும், 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகளின் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டதும், அச்சட்டத்தின் 30 ஆம் பிரிவில் வரைவிலக்கணங் கூறப்பட்டுள்ளவாறு தனியார் கம்பெனியொன்றாக இல்லாதிருப்பதும் ; அத்துடன்

(அ) அத்தகைய கம்பெனியினால் கொண்டுநடத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள காப்புறுதித் தொழில், ஆயுட்காப்பீட்டுத் தொழில் மட்டுமானதாக இருக்குமிடத்து, ஒன்றரைக் கோடி ரூபாவுக்கு மேற்பட்டும் ஆனால் இரண்டரைக்கோடி ரூபாவுக்குக் குறைவாகவும் ;

(ஆ) அத்தகைய கம்பெனியினால் கொண்டுநடத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள காப்புறுதித் தொழில் ஆயுட்காப்பீட்டுத் தொழில் அல்லாத வேறு எதேனும் வகுப்பினதாக அல்லது வகுப்புகளினதாக இருக்குமிடத்து, இரண்டரைக்கோடி ரூபாவுக்கு மேற்பட்டும் ஆனால் ஐந்துகோடி ரூபாவுக்குக் குறைவாகவும்,

செலுத்தப்பட்ட பங்கு மூலதனங் கொண்டதாகவும் உள்ள ஒரு கம்பெனியொன்று, அத்தகைய கம்பெனி, அதன் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தின் பெறுமதியைவிட மூன்று மடங்கிற்கு அதிகப்படாத தொகைக்குக் காப்புறுதிப் பத்திரம் வழங்கலாகாது என்ற நிபந்தனைக்கமைய, காப்புறுதித் தொழிலைக் கொண்டுநடத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளதாக இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்படலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :—

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்—

(i) பந்தி (அ) என்பதிலுள்ள " கூற்று ஒன்றுடனும், அத்துடன் " என்னும் சொற்களுக்குப் பதிலாக " கூற்று ஒன்றுடனும் " என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(ii) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன்மூலமும் :—

" (ஆ) கம்பெனியின் அமைப்பக, அமைப்புப்புற விதிகளினது சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றுடனும் ;

(இ) கம்பெனியின் கூட்டிணைப்புச் சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றுடனும் ;

(ஈ) கம்பெனிகளின் பதிவாளரினால் வழங்கப்பட்ட தொழில் தொடக்கச் சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட தேதியொன்றுடனும் ;

(உ) (i) கம்பெனியின் பங்குதாரர்கள் ;

(ii) கம்பெனியின் பணிப்பாளர்கள் ;

(iii) பிரிவுகள் 19அ, 34அ என்பனவற்றில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள அலுவலர்கள்,

ஆகியோர் தொடர்பாக விதித்துரைக்கப்பட்ட விபரங்களைத் தருகின்ற கூற்று ஒன்றுடனும் ;

(ஊ) கம்பெனியினால் கொண்டுநடத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள காப்புறுதித் தொழிலின் வகுப்பினை அல்லது வகுப்புகளைத் தருகின்ற கூற்று ஒன்றுடனும் ; அத்துடன்

(எ) கம்பெனியின் செலுத்தப்பட்ட பங்குமூலதனத்தின் தொகையைத் தருகின்ற கூற்று ஒன்றுடனும். ".

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலமும் ; அத்துடன்

(இ) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

" (4) இப்பிரிவின்கீழ், பதிவுக்கான ஒவ்வொரு விண்ணப்பமும் பின்வருவனவற்றுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும் :—

(அ) விதித்துரைக்கப்பட்ட கட்டணம் ; அத்துடன்

(ஆ) கட்டுப்பாட்டாளரின் அங்கீகாரத்துக்கென சமர்ப்பிக்கப்பட்டதும் மூன்று ஆண்டுக் காலப்பகுதிக்கானதுமான ஒரு வேலைத்திட்டம் அல்லது தொழில் திட்டம்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

"(1) இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்படுவதற்காக ஒரு விண்ணப்பஞ்செய்கின்ற ஏதேனும் கம்பெனி, 5 ஆம், 6 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளோடு இணங்கியொழுகியுள்ளதாகக் கட்டுப்பாட்டாளர் திருப்தியடையுமிடத்து, இலங்கையில் காப்புறுதித் தொழிலைக் கொண்டுநடத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஓர் ஆள் என்றவாறு அத்தகைய கம்பெனியைக் கட்டுப்பாட்டாளர் பதிவுசெய்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கம்பெனி கொண்டுநடத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள காப்புறுதித் தொழிலின் வகுப்பினை அல்லது வகுப்புகளைக் குறித்துரைத்தலும் வேண்டும்.",

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும் :—

"(3) இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்படும் பதிவுச் சான்றிதழ் ஒவ்வொன்றும் ஓராண்டுக் காலப்பகுதிக்குச் செல்லுபடியானதாதல் வேண்டும் என்பதுடன், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்குக்கமைய, ஐயாயிரம் ரூபாக் கட்டணம் கொடுப்பனவின்மேல் ஆண்டுதோறும் புதுப்பிக்கவும் படலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு அதிலுள்ள "6 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் அல்லது (2) ஆம் உட்பிரிவின்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "6 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவை நீக்குதல்.*

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியிலுள்ள "இருநூற்றைம்பது ரூபாக் கட்டணமொன்றும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "விதித்துரைக்கப்பட்ட கட்டணமும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவு, அப்பிரிவிலுள்ள "இலங்கைக் காப்புறுதியாளர் ஒவ்வொருவரும்" எனத் தொடங்கி "வைத்திருந்து பேணுதல் வேண்டும்" என முடிவடைவது வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, "காப்புறுதியாளர் ஒவ்வொருவரும் அத்தகைய காப்புறுதியாளரால் செய்துகொள்ளப்படும் எல்லாக் காப்புறுதித் தொழில் தொடர்பிலும் பின்வருவனவற்றை வைத்திருந்து பேணுதல் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் பிரிவுகளை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

“ (1) (அ) ஒரு காப்புறுதியாளர், அவரால் செய்துகொள்ளப்படும் அல்லது வழங்கப்படும் ஏதேனும் ஒப்பந்தத்திலிருந்து அல்லது காப்புறுதிப் பத்திரத்திலிருந்து எழுகின்ற ஏதேனும் பொறுப்பினை, கட்டுப்பாட்டாளரின் அங்கீகாரத்தோடும் அதற்கெனக் கட்டுப்பாட்டாளரினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமையவும், இலங்கைக்கு உள்ளேயோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ மீளவும் காப்புறுதி செய்து கொள்ளலாம்; அத்துடன்

(ஆ) ஒவ்வொரு காப்புறுதியாளரும், அவரால் செய்துகொள்ளப்பட்ட அல்லது வழங்கப்பட்ட தீ, கடல், காப்புறுதி ஒப்பந்தங்களினதும் பத்திரங்களினதும்பேரில் அவரால் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டுப்பணத்தின் மொத்த ஆண்டுத்தொகையில் பதினைந்து சதவீதத்தை, மீள் காப்புறுதி என்ற வகையில் தேசியக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்குக் கையளித்தல் வேண்டும் ;

(2) மீள்காப்புறுதி செய்துகொள்கின்ற எவரேனும் காப்புறுதியாளரை, அத்தகைய காப்புறுதியாளரிடம் செய்துகொள்ளப்படக்கூடிய ஏதேனும் உரிமைக் கோரிக்கையைத் திருப்திப்படுத்துவதற்கு அவசியமான நிதியை அத்தகைய காப்புறுதியாளர் வைத்துள்ளாரா என்பதனை நிச்சயப்படுத்திக்கொள்வதற்கு அவசியமானதெனத் தாம் கருதக்கூடியவாறான அத்தகைய தகவலைக் கொடுத்துதவும்படி அத்தகைய காப்புறுதியாளரை எழுத்திலான அறிவித்தல்மூலம் கட்டுப்பாட்டாளர் தேவைப்படுத்தலாம் என்பதுடன் அத்தகைய அறிவித்தலின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் அத்தகைய காப்புறுதியாளரின் கடமையாதலும் வேண்டும். ”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 19அ, 19ஆ, 19இ, 19ஈ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அவை முதன்மைச் சட்டவாக்கத்தின் 19அ, 19ஆ, 19இ, 19ஈ என்னும் பிரிவுகளாகப் பயனுடையவையாதலும் வேண்டும் :—

“ காப்புறுதித் தொழிலைக் கொண்டு நடத்தும் காப்புறுதியாளரின் பணியாட்டொகுதியினர்.

**19அ.** ஆயுட் காப்பீட்டுத் தொழிலல்லாத வேறு காப்புறுதித் தொழிலைக் கொண்டுநடத்துகிற காப்புறுதியாளர் ஒவ்வொருவரும், பின்வரும் தகைமையைக் கொண்டிருக்கும் முகாமைத்துவ மட்டத்திலான ஓர் ஆளையேனும் தொழிலுக்கமர்த்துதல் வேண்டும் :—

(அ) பட்டயக் காப்புறுதி நிறுவகத்தின் இணையாளர் தகைமை அல்லது அதற்குச் சமமான தகைமை, அல்லது

(ஆ) பட்டயக் காப்புறுதி நிறுவகத்தின் இணையுரிமையாளர் அல்லது அதற்குச் சமமான தகைமை ; அத்துடன் தகைமைக்குப் பின்னர் குறைந்தபட்சம் ஐந்தாண்டுகால அனுபவம்.

3—ஏ 092810 (09/86)

காப்புறுதியாளரால் ஏதேனும் காப்புறுதி நாருக் கம்பெனியில் பங்குகள் வைத்திருத்தல் தடை செய்யப்படல்.

**19ஆ.** காப்புறுதியாளர் எவருமோ அல்லது ஒரு காப்புறுதியாளரின் வைத்திருக்கை அல்லது துணைநிலைக் கம்பெனி எதுவுமோ, காப்புறுதித் தாருத்தொழிலைக் கொண்டுநடத்துகிற எக்கம்பெனியிலும் எவையேனும் பங்குகளை வைத்திருத்தல் ஆகாது.

காப்புறுதியாளர் எவ்வாட்களிடமிருந்து காப்புறுதித் தொழிலை ஏற்கலாம் என்பது.

**19இ.** காப்புறுதியாளர் எவரும்—

(அ) காப்புறுதி செய்யப்பட்ட எவர் தொடர்பில் காப்புறுதி ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டுள்ளதோ அல்லது காப்புறுப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளதோ அவ்வாளிடமிருந்து ;

(ஆ) மீள் காப்புறுதி தொடர்பில், இன்னொரு காப்புறுதியாளரிடமிருந்து ;

(இ) காப்புறுதி முகவர் ஒருவரிடமிருந்து ; அல்லது

(ஈ) இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட காப்புறுதித் தரகர் ஒருவரிடமிருந்து

தவிர ஏதேனும் காப்புறுதித் தொழிலை ஏற்றுக்கொள்ளுதலாகாது.

பொதுக் காப்புறுதிக் கொள்கைகளின் கீழ் காப்புறுதியாளருக்குள்ள பொறுப்பு.

**19ஈ.** ஆயுட் காப்பீட்டுத்தொழில் அல்லாத வேறு காப்புறுதித் தொழில் தொடர்பில், காப்புறுதியாளர் ஒருவர், அவரால் செய்துகொள்ளப்பட்ட காப்புறுதி ஒப்பந்தத்தின்கீழ் அல்லது வழங்கப்பட்ட காப்புறுதிப் பத்திரத்தின்கீழ் கொடுக்குமதியாகவுள்ள ஏதேனும் தொகையை—

(அ) அத்தகைய ஒப்பந்தத்தின்கீழ் அல்லது பத்திரத்தின்கீழ் எத்தேதியன்று அத்தகைய தொகை செலுத்தப்படற்பாலதாகிறதோ அத்தேதியன்று கட்டுப்பணம் முழுமையாகச் செலுத்தப்பட்டிருந்தாலொழியவும் ; அல்லது

(ஆ) அத்தகைய கட்டுப்பணம் கொடுப்பனவுக்கான வங்கி உத்தரவாதமொன்று, காப்புறுதி செய்துகொண்டவரால், அத்தகைய தொகை கொடுபடற்பாலதாகிய தேதியன்று கொடுத்துதவப்பட்டாலொழியவும், அத்துடன் காப்புறுதிசெய்துகொண்டவர் அத்தகைய கட்டுப்பணத்தை அத்தகைய தேதியன்று செலுத்தினலொழியவும்

செலுத்துவதற்கு ஆளாகாதிருத்தல் வேண்டும்.".

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகிறது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"கட்டுப்பணத்தின் வீதங்களை நிருணயிப்பதற்குக் கட்டுப்பாட்டாளருக்குள்ள தத்துவம்.

21. (1) காப்புறுதியாளர்களால் வழங்கப்படவேண்டிய காப்புறுதிப் பத்திரங்கள் தொடர்பில் அவர்களால் இறுக்கப்படவேண்டிய ஆகக்கூடிய அல்லது ஆகக் குறைந்த கட்டுப்பண வீதங்களை, அல்லது அத்தகைய இரு வீதங்களையும், கட்டுப்பாட்டாளர் காலத்துக்குக் காலம் நிருணயித்து அறிவிக்கலாம்.

(2) காப்புறுதியாளர் எவரும், எவ்வகுப்பினதான காப்புறுதி தொடர்பிலும் அவரால் செய்துகொள்ளப் பட்ட ஒப்பந்தத்தின்கீழ் அல்லது அவரால் வழங்கப் பட்ட காப்புறுதிப்பத்திரத்தின்கீழ்—

(அ) அவ்வகுப்பினதான காப்புறுதிக்கென (1) ஆம் உட்பிரிவின்கீழ் நிருணயிக்கப்பட்ட ஆகக் கூடிய வீதத்திற்கு மேற்பட்டதான ; அல்லது

(ஆ) அவ்வகுப்பினதான காப்புறுதிக்கென (1) ஆம் உட்பிரிவின்கீழ் நிருணயிக்கப்பட்ட ஆகக் குறைந்த வீதத்துக்குக் குறைவானதான

தொகையொன்றைக் கட்டுப்பணமாக ஏற்றலாகாது.".

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 21அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

முதன்மைச் சட்டவாக்கத்தில் 21அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

"பத்திரப் படிவங்கள்.

"21அ. (1) எவரேனும் காப்புறுதியாளரால் வழங்கப்பட்ட பத்திரப்படிவங்களின் பிரதிகளைக் கொடுத்துதவும்படி அத்தகைய காப்புறுதியாளரை எழுத்திலான அறிவித்தல் மூலம் கட்டுப்பாட்டாளர் தேவைப் படுத்தலாம் என்பதுடன், அத்தகைய அறிவித்தலின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் அத்தகை காப்புறுதியாளரின் கடமையாதலும் வேண்டும்.

(2) கட்டுப்பாட்டாளர் ஆனவர், அத்தகைய பத்திரப் படிவத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள காப்புறுதி ஒப்பந்தத்தின் நியதிகள் நியாயமானவையும் ஒப்புரவானவையுமாக உள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக்கொள்ளும் தேவையைக் கருத்திற்கொண்டு இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் தம்மிடம் கொடுத்துதவப் பட்ட ஏதேனும் பத்திரப் படிவத்திற்கான திருத்தங்கள் பற்றி ஆலோசனை கூறலாம் என்பதுடன், அத்தகைய திருத்தங்கட்குப் பயன்கொடுத்தல் அத்தகைய படிவங்களைக் கொடுத்துதவுகின்ற காப்புறுதியாளரின் கடமையாதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துதல்.

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு, அதிலுள்ள " அத்தகைய காப்புறுதியாளர் ஒரு கம்பெனியாக இருக்குமாயின்" என்னும் சொல்லமைப்பை அதிலிருந்து விட்டுவிடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவைத் திருத்துதல்.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :—

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவிலுள்ள " அத்தகைய காப்புறுதியாளர் ஒரு கம்பெனியாக இருக்குமிடத்து" என்னும் சொல்லமைப்பை விட்டுவிடுவதன்மூலமும்; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவிலுள்ள " அத்தகைய காப்புறுதியாளர் ஒரு கம்பெனியாக இருக்குமிடத்து" என்னும் சொல்லமைப்பை விட்டுவிடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 34அ, 34ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்தல்.

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அவை முதன்மைச் சட்டவாக்கத்தின் 34அ, 34ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :—

" ஆயுட் காப்பீட்டுத் தொழிலைக் கொண்டு நடத்துகின்ற காப்புறுதியாளரின் பணியாட்டொகுதியினர்.

34அ. ஆயுட் காப்பீட்டுத் தொழிலைக் கொண்டு நடத்துகின்ற காப்புறுதியாளர் ஒவ்வொருவரும்—

(அ) ஆயுட் காப்பீட்டில், முகாமைத்துவ மட்டத்தில், பத்து ஆண்டுகளுக்கு மேல் அனுபவமுடையவரான ஓர் ஆளையேனும் அதன் பணியாட்டொகுதியில் தொழிலுக்கமர்த்துதல் வேண்டும் ;

(ஆ) அத்தகைய தொழிலின் நிதிசார் நிலைமையை நுண்ணாய்வு செய்வதற்கென ஆயுட் காப்பீடு கணக்கர் ஒருவரைத் தொழிலுக்கமர்த்துதல் வேண்டும், அல்லது நிரந்தர அடிப்படையில் வைத்திருத்தல் வேண்டும்.".

ஒதுக்க நிதியம்.

34ஆ. (1) ஆயுட் காப்பீட்டுத் தொழிலைக் கொண்டு நடத்துகின்ற காப்புறுதியாளர் ஒவ்வொருவரும், (4) ஆம் உட்பிரிவுக்கமைய, மூலதனம் உள்ளிட்ட அவரது ஒதுக்கு நிதிகளில் ஐம்பது சதவீதத்தை அரசாங்க பிணைப்பொறுப்புகளிலும் மிகுதியை அங்கீகரிக்கப்பட்ட முதலீடுகளிலும் முதலீடு செய்தல் வேண்டும்.

(2) ஆயுட் காப்பீட்டுத் தொழில் அல்லாத வேறு காப்புறுதித் தொழிலைக் கொண்டுநடத்துகின்ற காப்புறுதியாளர் ஒவ்வொருவரும், (4) ஆம் உட்பிரிவுக்கமைய, மூலதனம் உள்ளிட்ட அவரது ஒதுக்கு நிதிகளில் முப்பது சதவீதத்தை அரசாங்கப் பிணைப்பொறுப்புகளிலும் மிகுதியை அங்கீகரிக்கப்பட்ட முதலீடுகளிலும் முதலீடு செய்தல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கத்துக்கென "அங்கீகரிக்கப்பட்ட முதலீடு" என்பது பின்வருவன எனப் பொருள்படும் :—

(அ) அங்கீகரிக்கப்பட்ட பிணைப்பொறுப்புகள் ;

(ஆ) வர்த்தக வங்கிகளுடனான வைப்புக்கள் ;

(இ) 1975 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க அரசகட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அரசகட்டு வங்கிகளுடனான வைப்புக்களும் முதலீடுகளும், (401 ஆம் அத்தியாயமான) தேசிய வீடமைப்புச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட இலங்கைத் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்துடனான வைப்புக்களும் முதலீடுகளும் ;

(ஈ) பகிரங்கமாக விலைகூறிப்பெறப்பட்ட பங்குகளையுடைய கம்பெனிகளிலான முதலீடுகள்.

(4) காப்புறுதியாளர் எவரும்—

(அ) அதனது ஒதுக்கு நிதிகளில் ஐந்து சதவீதத்துக்கு மேற்பட்டதனைக் கட்டுப்பாட்டாளரின் அனுமதியில்லாது, (3) ஆம் உட்பிரிவின் (அ) அல்லது (ஈ) என்னும் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவையான அங்கீகரிக்கப்பட்ட முதலீடு எதனிலும் ; அல்லது

(ஆ) ஒரு வைப்பென்ற முறையில் அதனது ஒதுக்கு நிதிகளில் ஐந்து சதவீதத்துக்கு மேற்பட்டதனை காப்புறுதியாளரிடம் பங்குகளைக் கொண்டிருக்கும் வங்கியாக அல்லது காப்புறுதியாளரின் வைத்திருக்கை வங்கியாக அல்லது அதன் துணைநிலை வங்கியாக உள்ள வர்த்தக வங்கி எதனிலும்

முதலீடு செய்தல் ஆகாது.".

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "இலங்கைக் காப்புறுதியாளர் ஒவ்வொருவரும் எனத் தொடங்கி "தயாரித்தல் வேண்டும்" என முடிவடைவது வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக "காப்புறுதியாளர் ஒவ்வொருவரும், அத்தகைய காப்புறுதியாளரால் செய்துகொள்ளப்படும் எல்லாக் காப்புறுதித் தொழில் தொடர்பிலும், ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டு முடிவடைந்ததும் அவ்வாண்டைத் தொடர்புறுத்திப் பின்வருவனவற்றைத் தயாரித்தல் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலம் :—

"(2) கம்பெனியொன்றின் விடயத்தில், ஓராம் உட்பிரிவில்

நூரிப்பீடு செய்யப்பட்ட கணக்குகளும் கூற்றுகளும், அத்தகைய கணக்குகளிலும் கூற்றுகளிலும் ஒப்பிடுவதற்கென 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தினல் தேவைப்படுத்தப்பட்ட அலுவலர்களினலும் அல்லது ஆட்களினலும், அத்துடன் வேறேதேனும் விடயத்தில் காப்புறுதியாளராலும் ஒப்பமிடப்படல் வேண்டும்; அத்துடன் அத்தகைய கணக்குகளும் கூற்றுக்களும், எந்தக் காலப்பகுதி தொடர்பானவையோ அந்தக் காலப்பகுதியின்போது தொழிலின் முகாமைக்குப் பொறுப்பாகவிருந்த ஆட்களுள் ஒவ்வொருவரினதும் பெயர்களையும் விவரணங்களையும் கொண்டிருக்கும் கூற்று ஒன்றுடனும் அத்துடன் அக்காலப் பகுதியின்போது தொழிலின் அலுவல்கள் பற்றிய அத்தகைய ஆட்களின் அறிக்கை ஒன்றுடனும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவைத் திருத்துதல்.

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :—

(அ) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவிலுள்ள "காப்புறுதியாளரால் அல்லது காப்புறுதியாளரின் அதிகாரம் பெற்ற அலுவலரால், அல்லது காப்புறுதியாளர் ஒரு கம்பெனியாக இருக்குமிடத்து" என்னும் சொற்களை விட்டுவிடுவதன் மூலமும்;

(ஆ) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவை நீக்குவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவைத் திருத்துதல்

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :—

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற்கான காப்பு வாசகத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் காப்பு வாசகங்களை இடுவதன்மூலம் :—

"ஆயின், விவரத்திரட்டுகளைக் கொடுத்துதவுவதற்காக அனுமதிக்கப்பட்ட காலப்பகுதியை, மூன்று மாதங்களுக்கு மேற்படாத காலப்பகுதியொன்றுவரை கட்டுப்பாட்டாளர் நீடிக்கலாம்" அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன்மூலம் :—

"(2) ஓராம் உட்பிரிவின் கீழ் கொடுத்துதவப்பட்ட நான்கு பிரதிகளில் ஒன்று, பணிப்பாளர்களினல் ஒப்பமிடப்படல் வேண்டும்".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவைத் திருத்துதல்.

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவு அதிலுள்ள "கம்பெனி ஒன்ருகவுள்ள காப்புறுதியாளர் ஒருவரின் விடயத்தில்" என்னும் சொற்களை விட்டுவிடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 54 ஆம் பிரிவைத் திருத்துதல்.

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் 54 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது :—

" (3) காப்புறுதியாளரின் அமைப்பக விதிகளில் அல்லது அமைப்புப் புற விதிகளில் அல்லது எது எப்படியிருப்பினும், (2) ஆம் உட்பிரிவின்கீழ் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பின்பற்றிக் கட்டுப்பாட்டாளரினால் செய்யப்படும் எச்செயலும் பயனுடையதாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவைத் திருத்துதல்.

23. முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகிறது :—

" நிருவாகிகளிடமிருந்து ஆதனத்தை அல்லது ஆவணங்களை தடுத்துவைத்தலுக்கான தண்டம்.

58. காப்புறுதியாளர் ஒருவரின் பணிப்பாளர் எவரேனும், நிருவாகியிடம் முகாமைத்துவப் பொறுப்பு உரித்தாக்கியுள்ள காப்புறுதியாளரின் தொழில் தொடர்பில் தனது கட்டுக்காப்பிலுள்ள எவையேனும் கணக்குப் புத்தகங்களை, இடாப்பினை அல்லது எவையேனும் ஆவணங்களை நிருவாகி ஒப்படைப்பதற்குத் தவறுவாரெனின் அல்லது அத்தகைய காப்புறுதியாளரின் ஆதனம் எதனையும் வைத்திருப்பாரெனின், அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் ஆறு மாதங்களுக்கு மேற்படாத காலப்பகுதியொன்றுக்கான இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது ஓராயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவைத் திருத்துதல்.

24. முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது :—

" (1) ஒரு காப்புறுதியாளரால் கொண்டுநடாத்தப்படும் காப்புறுதித் தொழில் தொடர்பான சொத்துக்களின் பெறுமதியானது, இச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் அத்தகைய கம்பெனியினால் பேணப்பட வேண்டுமென அப்போதைக்குத் தேவைப்படுத்தப்பட்ட வைப்புத் தொகை அல்லது முன்னைய நிதியாண்டுக்கான பொதுவான கட்டுப்பண வருமானத்தில் பத்தில் ஒரு பகுதி ஆகிய இவ்விரண்டில் எத்தொகை கூடியதோ, அத்தொகையினால் அத்தகைய தொழில் தொடர்பான பொறுப்புகளின் தொகை விஞ்சாதாயின், 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் 254 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக அக்காப்புறுதியாளர் அதன் கடன்களைச் செலுத்துவதற்கு இயலாதவர் எனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க ஏற்புடையனவாதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 70 ஆம் பிரிவைத் திருத்துதல்.

25. முதன்மைச் சட்டவாக்கத்தின் 70 ஆம் பிரிவு அதிலுள்ள "வழக்கு மூலம்" என்னும் சொற்கள் தொடங்கி (அ), (ஆ), (இ) என்னும் பந்திகள் உட்பட "உரித்துடையவராதல் வேண்டும்" என முடிவடைவது வரையிலான அனைத்தையும் விட்டுவிட்டு அவற்றுக்குப் பதிலாக "வழக்கு மூலம் அத்தேதியன்று அல்லது அத்தேதிக்குப் பின்னர் அத்தகைய ஆளினாலும், அத்தகைய ஆள் கம்பெனியொன்றாக இருக்குமிடத்து, அத்தகைய கம்பெனியின் ஒவ்வொரு பணிப்பாளரினாலும் வைத்திருக்கப்படும் வேறு சொத்துக்கள் எவற்றுக்கும் எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும் அத்துடன் அத்தகைய காப்புறுதிப் பத்திரத்தின்கீழ் நிலுவையாகவுள்ள ஏதேனும் தொகையை அறவிடுவதற்கும் உரித்துடையவராதல் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 73 ஆம் பிரிவைத் திருத்துதல்.

26. முதன்மைச் சட்டவாக்கத்தின் 73 ஆம் பிரிவு, அப்பிரிவின் 2 ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது :—

"(2) இச்சட்டத்தின்கீழான தவறொன்று ஒரு காப்புறுதியாளரால் புரியப்படுமிடத்து, அக்காப்புறுதியாளரின் பணிப்பாளர் ஒவ்வொருவரும், அவர் அறியாத வகையில் அல்லது அவரது சம்மதமின்றி அத்தவறு புரியப்பட்டதெனவும் அத்துடன் அத்தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்கு நியாயமான எல்லா நடபடிகளையும் தாம் எடுத்தாரெனவும் அவர் எண்பித்தாலொழிய, அத்தவறுக்கு அவரும் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் அதே தண்டனைக்கு அவர் ஆளாதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் பாகம் VIIIஅ என்னும் புதிய பாகத்தினை உட்புகுத்தல்.

27. முதன்மைச் சட்டவாக்கத்தின் VIII ஆம் பாகத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய பாகம், இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் அது அச்சட்டவாக்கத்தின் பாகம் VIIIஅ, எனப் பயனுறுதலும் வேண்டும் :—

## பாகம் VIIIஅ

### காப்புறுதித் தரகர்களைப் பதிவுசெய்தல்

"பதிவுசெய்யப்படாமல் காப்புறுதித் தரகர் என்ற தொழிலைக் கொண்டு நடாத்துதலை தடைசெய்தல்.

75அ. (1) ஆள் எவரும், காப்புறுதித்தரகர் என்ற அத்தகைய தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளவராக இப்பாகத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டிருந்தாலொழிய, அத்தகைய தொழிலைக் கொண்டுநடத்துவதற்குத் தொடங்குதலாகாது.

(2) ஆள் எவரும்—

(அ) அவர், எவ்வகுப்பினதான காப்புறுதித்தொழில் தொடர்பில் தரகராகப் பதிவுசெய்யப்படுவதற்கு விண்ணப்பித்துள்ளாரோ, அவ்வகுப்பில் குறைந்தபட்சம் பதினைந்து ஆண்டுகால அனுபவத்தையுடையவராக அல்லது பட்டயக் காப்புறுதி நிறுவகத்தில் இணைப்பாளர் தகைமையுடன் அல்லது அதற்குச் சமமான தகைமையுடன் எவ்வகுப்பினதான காப்புறுதித் தொழில் தொடர்பில் தரகராகப் பதிவு

செய்யப்படுவதற்கு அவர் விண்ணப்பித்துள்ளாரோ, அவ்வகுப்பில் தகைமைக்குப் பின்னர் ஐந்தாண்டு கால அனுபவத்தை உடையவராக அல்லது பட்டயக் காப்புறுதி நிறுவகத்தின் இணைப்புரிமையாளர் தகைமையுடன் அல்லது அதற்குச் சமமான தகைமையுடன் எவ்வகுப்பினதான காப்புறுதித்தொழில் தொடர்பில் தாகராகப் பதிவுசெய்யப்படுவதற்கு விண்ணப்பித்துள்ளாரோ, அவ்வகுப்பில் தகைமைக்குப் பின்னர் ஐந்தாண்டுகால அனுபவத்தை உடையவராகவிருந்தாலொழிய, இச்சட்டத்தின்கீழ் காப்புறுதித் தாகர் ஒருவராகப் பதிவுசெய்யப்படலாகாது.

(ஆ) அத்தகைய ஆள், கம்பெனியாக இருக்குமிடத்து, எவ்வகுப்பினதான காப்புறுதித் தொழில் தொடர்பில் பதிவு செய்யப்படுவதற்கு அக்கம்பெனி விண்ணப்பித்துள்ளதோ, அவ்வகுப்பில் குறைந்தபட்சம் பதினைந்தாண்டு கால அனுபவத்தை உடையவரான அல்லது பட்டயக் காப்புறுதி நிறுவகத்தின் இணைப்பாளர் தகைமையுடன் அல்லது அதற்குச் சமமான தகைமையுடன் எவ்வகுப்பினதான காப்புறுதித்தொழில் தொடர்பில் தாகராகப் பதிவுசெய்யப்படுதற்கு அக்கம்பெனி விண்ணப்பித்துள்ளதோ, அவ்வகுப்பில் தகைமைக்குப் பின்னர் ஐந்தாண்டு கால அனுபவத்தை உடையவரான, அல்லது பட்டயக் காப்புறுதி நிறுவகத்தின் இணைப்புரிமையாளர் தகைமையுடன் அல்லது அதற்குச் சமமான தகைமையுடன் எவ்வகுப்பினதான காப்புறுதித்தொழில் தொடர்பில் தாகராகப் பதிவுசெய்யப்படுதற்கு அக்கம்பெனி விண்ணப்பித்துள்ளதோ, அவ்வகுப்பில் தகைமைக்குப் பின்னர் ஐந்தாண்டு கால அனுபவத்தை உடையவரான ஓர் ஆளையேனும் நிரந்தரமான பதவியில் அத்தகைய கம்பெனி தொழிலுக்கமர்த்தினாலொழிய, இச்சட்டத்தின்கீழ் காப்புறுதித் தாகர் ஒருவராகப் பதிவுசெய்யப்படலாகாது.

(3) ஆள் எவரும் அத்தகைய ஆளினால் ஆயிரம் ரூபாக் கட்டணமொன்று கட்டுப்பாட்டாளருக்குச் செலுத்தப்படுவதன்மேல் தவிர, காப்புறுதித் தாகராக இப்பாகத்தின்கீழ் பதிவுசெய்யப்படலாகாது.

(4) காப்புறுதித் தாகராக இப்பாகத்தின் கீழ் பதிவுசெய்யப்படும் ஒவ்வோராளும், ஏழாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைந்தவராதல் வேண்டும்.

(5) காப்புறுதித் தரகராக இப்பாகத்தின் கீழ் எவரேனுமாள் பதிவுசெய்யப்பட்டு, அத்தகைய ஆள் ஏழாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள நியதிகள், நிபந்தனைகள் என்பனவற்றுள்ளதெதனையும் செயலாற்றமிடத்து, கட்டுப்பாட்டாளர் ஆனவர், கட்டளையொன்றின்மூலம், அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்படும் ஏதேனும் காலப்பகுதிக்கு அத்தகைய பதிவை இடைநிறுத்தி வைக்கலாம் அல்லது இல்லாதொழிக்கலாம்.

பதிவுச்சான்றிதழை வழங்கல்.

75ஆ. இப்பாகத்தின்கீழ் காப்புறுதித் தரகராக எவரேனுமாள் பதிவுசெய்யப்படுவதன்மேல், அத்தகைய ஆளுக்குப் பதிவுச் சான்றிதழொன்று கட்டுப்பாட்டாளரினால் வழங்கப்படல் வேண்டும்.

பதிவுச் சான்றிதழைப் புதுப்பித்தல்.

75இ. (1) இப்பாகத்தின்கீழ் வழங்கப்படும் பதிவுச் சான்றிதழ்—

(அ) ஓராண்டு காலப்பகுதிக்குச் செல்லுபடியானதாகுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) ஐந்நூறு ரூபாக் கட்டணக் கொடுப்பனவின் மேல் ஆண்டுதோறும் புதுப்பிக்கப்படல் வேண்டும்.

(2) இப்பாகத்தின்கீழ் வழங்கப்படும் பதிவுச் சான்றிதழ் அதனை வைத்திருப்பவர், ஆயுட் காப்பீட்டுத் தொழில் தொடர்பில் காப்புறுதித் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு அல்லது ஆயுட் காப்பீட்டுத் தொழில் அல்லாத வேறு வகுப்பினதான அல்லது வகுப்புகளினதான காப்புறுதித் தொழில் தொடர்பில் தரகராகத் தொழில் கொண்டு நடாத்துவதற்கு அதிகாரமளித்தல் வேண்டும்.

ஆயுள் காப்பீட்டுத் தொழில் தொடர்பிலும் ஆயுட் காப்பீட்டுத் தொழில் அல்லாத வேறு வகுப்பினதான அல்லது வகுப்புகளினதான காப்புறுதித் தொழில் தொடர்பிலும் காப்புறுதித் தரகராகத் தொழில் கொண்டு நடாத்துவதற்கு முன்னம் கொள்ளுகின்ற ஒவ்வொரு தரகரும், இரண்டு பதிவுச் சான்றிதழ்களுக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

பதிவுச் சான்றிதழ் கைமாற்றப்படலாகாது.

75ஈ. பதிவுச் சான்றிதழ் எதுவும்—

(அ) வேறு எவரேனுமாளுக்குக் கைமாற்றப்படலாகாது என்பதுடன் அதற்கிணங்க, அத்தகைய ஏதேனும் கைமாற்றம் வெற்றும் வறிதுமாதலும் வேண்டும் ;

(ஆ) வேறு எவரேனுமாளின் நன்மைக்காகப் பயன்படுத்தப்படலாகாது.

பதிவை இடைநிறுத்தல் அல்லது இல்லாதாக்குதல்.

75உ. (1) பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்டவரான எவரேனுமொருவர்—

(அ) பொறுப்பு விடுவிக்கப்படாத வங்கி முறிந்தவர் அல்லது கடனிறுக்கவகையற்றவர் ; அல்லது

(ஆ) ஒழுக்கக்கேட்டை உட்படுத்துகின்ற ஏதேனும் தவறுக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டவர் ; அல்லது

(இ) வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ், சித்த சுவாதீனமற்றவர் எனக் காணப்பட்டவர் அல்லது வெளிப்படுத்தப்பட்டவர் ; அல்லது

(ஈ) கட்டுப்பாட்டாளரினால் கொடுக்கப்படும் அறிவுறுத்தல்களுக்கு விடாப்பிடியாகக் கீழ்ப்படியாதிருப்பவர்

என்ற காரணத்துக்காக, அத்தகைய தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு தகுதியற்றவர் எனக் கட்டுப்பாட்டாளர் அபிப்பிராயப்படுவாரெனின், அவர், பிறழ் நடத்தையின் தன்மையைக் கருத்திற்கொண்டு, கட்டளை மூலம், அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்படும் ஏதேனும் காலப்பகுதிக்கு அத்தகைய சான்றிதழை நிறுத்திவைக்கலாம் அல்லது இல்லாதாக்கலாம்.

(2) காப்புறுதித் தரகராகத் தொழில் நடத்துகின்ற ஓர் ஆளுக்கு எதிராக, ஓர் அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குள் அத்தகைய கட்டளையை ஏன் ஆக்கக்கூடாதெனக் காரணம் காட்டும்படி அவருக்கு எழுத்திலான அறிவித்தல் அனுப்பப்பட்ட பின்னர் தவிரவும், அத்துடன் அவர் அத்தகைய காலப்பகுதிக்குள் காரணம் காட்டுவதற்குத் தவறுகின்றதன்மேல் அல்லது போதிய காரணம் காட்டாதிருக்கின்றதன்மேல் தவிரவும், (1) ஆம் உட்பிரிவின்கீழான கட்டளை எதுவும் ஆக்கப்படலாகாது.

(3) காப்புறுதித் தரகராகத் தொழில் கொண்டு நடாத்துகின்ற எவ்வாளுக்கு எதிராக (1) ஆம் உட்பிரிவின்கீழ் கட்டளை ஆக்கப்பட்டதோ அவ்வாள், அத்தகைய கட்டளையை ஆக்கியவரான கட்டுப்பாட்டாளரினால் அல்லது அவர் சார்பில், அத்தகைய கட்டளை அவ்வாளுக்கு அனுப்பிவைக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் பத்து நாட்கள் முடிவடைவதற்கு முன்னர், அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு எழுத்திலான மேன்முறையீடு ஒன்றைச் செய்யலாம் ; செயலாளர் தமக்குச் செய்யப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டைக் கையாளுவதில், எந்தக் கட்டளைக்கு எதிராக அந்த மேன்முறையீடு செய்யப்பட்டதோ அந்தக் கட்டளையை உறுதிப்படுத்தலாம், வேறுபடுத்தலாம் அல்லது வெற்றுனதாக்கலாம்.

(4) காப்புறுதித் தரகராகத் தொழில் கொண்டு நடத்துவதற்கென ஆளொருவருக்கு வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழொன்றினை இடைநிறுத்திவைக்கின்ற அல்லது இல்லாதாக்குகின்ற (1) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளையொன்று அத்தகைய கட்டளை, கட்டுப்பாட்டாளரினால் அல்லது அவர் சார்பில் அவ்வாளுக்கு அறிவிக்கப்பட்ட தேதியன்று வலுவுக்கு வருதல்வேண்டும் என்பதுடன் அத்தகைய கட்டளைக்கு எதிராகச் செயலாளருக்கு மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது என்பதனைப் பொருட்படுத்தாது தொடர்ந்து வலுவிலிருந்து வருதலும் வேண்டும்.

(5) எவரேனும் ஆளுக்கு, இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் கொடுக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் அறிவித்தல் அல்லது அறிவிக்கப் படுத்தப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் கட்டளை, அவரது வழமையான தொழிலிடத்துக்கு அல்லது வதிவிடத்துக்குப் பதிவஞ்சல்மூலம் அனுப்பப்பட்ட கடிதமூலம் அத்தகைய அறிவித்தல் அல்லது கட்டளை அவ்வாளுக்கு அனுப்பிவைக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் கணக்கிடப்படும் இரண்டு நாட்களைக்கொண்ட காலப்பகுதி முடிவடைந்த பின்னர், அவரிடம் சேர்ப்பிக்கப்பட்டுவிட்டதாக அல்லது அவருக்கு அறிவிக்கப்படுத்தப்பட்டுவிட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

காப்புறுதித் தரகர்கள் தொடர்பான கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள்.

75ஊ. பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்குமாக அல்லது அவற்றுள் எவற்றுக்குமாக அத்துடன் அவை எல்லாவற்றின் தொடர்பிலும் அல்லது எவை தொடர்பிலும் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம் :—

(அ) காப்புறுதித் தரகராகப் பதிவுசெய்யப்படுவதற்கான விண்ணப்பம் செய்யப்படக்கூடியதும் கையாளப்படக்கூடியதுமான விதமும் முறையும் ;

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது அதன் கீழ் ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகள் இணங்கியொழுகப்படுகின்றனவா என்பதனை உறுதிப்படுத்துவதற்கு அவசியமாகக் கூடியவாறு. காப்புறுதித் தரகர் ஒருவரால் கொண்டு நடத்தப்படும் தொழில் தொடர்பான அத்தகைய எல்லாக் கூற்றுக்களையும் வெளிப்படுத்தல்களையும் கொடுத்துதவுதல் ;

(இ) ஆயுட் காப்பீட்டுத் தொழில் தொடர்பிலும் ஆயுட் காப்பீட்டுத் தொழில் அல்லாத வேறு ஏதேனும் வகுப்பினதான காப்புறுதித் தொழில் தொடர்பிலும் காப்புறுதித் தரகர் ஒருவரால் இறுக்கப்பட வேண்டிய தரகுப் பணத்தின் ஆகக் கூடிய அளவு.

காப்புறுதித் தரகருக்குப் பணிப்புக்கள் வழங்குவதற்கான தத்துவம்.

75எ. கட்டுப்பாட்டாளர் ஆனவர், காப்புறுதித் தரகராகத் தொழில் கொண்டுநடத்துகின்ற எவரேனும் ஆளுக்கு, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளுடன் அத்தகைய ஆள் இணங்கியொழுகுதலை உறுதிப்படுத்துகின்ற நோக்கத்துக்கு அவசியமானதென அவர் கருதக்கூடிய வாறான அத்தகைய பணிப்புகளை வழங்கலாம் என்பதுடன் அத்தகைய பணிப்புகள் எவ்வாளுக்கு வழங்கப்பட்டனவோ அவ்வாள், அவற்றில் குறித்துரைக்கப்படும் அத்தகைய காலத்துக்குள் அத்தகைய பணிப்புகளுடன் இணங்கியொழுகுதலும் வேண்டும்.

பதிவேடுகளைப் பேணல்.

75ஏ. காப்புறுதித் தரகராகத் தொழில் கொண்டு நடாத்துகின்ற ஒவ்வோர் ஆளும், விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பதிவேடுகளைப் பேணுதல் வேண்டும். ".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 76 ஆம் பிரிவைத் திருத்துதல்.

28. முதன்மைச் சட்டவாக்கத்தின் 76 ஆம் பிரிவு, பின்வருவனவற்றைப் பதிலிடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது :—

"(அ) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியிலுள்ள " ஓர் ஆள் " என்னும் சொற்களுக்குப் பதிலாக " காப்புறுதி வேலையில் தகுதிவாய்ந்த ஓர் ஆள் " என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியிலுள்ள " ஓர் ஆள் " என்னும் சொற்களுக்குப் பதிலாக " காப்புறுதி வேலையில் தகுதிவாய்ந்த ஓர் ஆள் " என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; ".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 76அ, 76ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்தல்.

29. முதன்மைச் சட்டவாக்கத்தின் 76 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அவை முதன்மைச் சட்டவாக்கத்தின் 76 அ, 76 ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :—

" காப்புறுதி ஆலோசனைக் குழு.

76அ. (1) காப்புறுதித் துறையில் சிறப்புப் பெற்றவர்களான ஆட்களிலிருந்தும் ஆட்களின் மத்தியிலிருந்தும் அமைச்சரினால் நியமிக்கப்பட்ட நான்கு ஆட்களைக் கொண்டிருப்பதும் காப்புறுதி ஆலோசனைக்

குழு என்றழைக்கப்படவேண்டியதுமான (இதனகத்துப்பின்னர் " ஆலோசனைக் குழு " எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஒரு குழு இருத்தல் வேண்டும்.

(2) குழுவின் தவிசாளராக இருப்பதற்குக் குழுவின் உறுப்பினர் ஒருவரை அமைச்சர் நியமித்தல் வேண்டும்.

(3) குழுவின் ஒவ்வோர் உறுப்பினரும் மரணத்தின் மூலம், பதவி விலகலின் மூலம் அல்லது பதவியகற்றப்படுதலின மூலம் முன்னதாகவே அவர் பதவியை வறிதாக்கினாலொழிய, மூன்று ஆண்டு களைக் கொண்ட காலப்பகுதிக்குப் பதவியை வகித்தல் வேண்டும். காலம் கழிவதன் மூலம் பதவி வறிதாக்கும் எவரேனும் குழு உறுப்பினர் நியமனத்துக்குத் தகவுடையவராவார்.

(4) குழுவின் உறுப்பினர் எவரும், அமைச்சருக்கு அனுப்பப்பட்ட முகவரியிடப்பட்ட கடிதத்தின் மூலம் உறுப்பினர் பதவியிலிருந்து விலகிக்கொள்ளலாம்.

(5) குழுவின் உறுப்பினர் எவரும், அமைச்சரினால் அதற்கான காரணம் காட்டப்படாமலே உறுப்பினர் பதவியிலிருந்து அகற்றப்படலாம்.

(6) குழுவின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்டநடப்பெண் இரண்டு உறுப்பினர்களாதல் வேண்டும்.

ஆலோசனைக் குழுவின் கடமைகள்.

76ஆ. இச்சட்டத்தின் நிருவாகம், செயற்பாடு என்பன குறித்தும் அத்துடன் குழுவின் ஆலோசனைக்காக அத்தகைய குழுவிடம் கட்டுப்பாட்டாளரினால் ஆற்றுப்படுத்தப்படக் கூடியனவும் அதற்குத் தொடர்பானவையுமான எவையேனும் கருமங்கள் குறித்தும் கட்டுப்பாட்டாளருக்கு ஆலோசனை கூறுதல், காப்புறுதி ஆலோசனைக்குழுவின் கடமையாதல் வேண்டும்."

முதன்மைச் சட்டவாக்கத்தின் 77 ஆம் பிரிவைத் திருத்தாதல்.

30. 1967 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 77 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :—

" (1) எவரேனும் காப்புறுதியாளருக்குச் சேர்ப்பிக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின் கீழ் தேவைப்படுத்தப்படும் அல்லது அதிகாரமளிக்கப்படும் ஏதேனும் அறிவித்தல் அல்லது வேறு ஆவணம், 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தில் அதற்கென அடங்கியுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க அதன் பணிப்பாளர் அல்லது முகாமையாளர் அல்லது அலுவலர் எவரிடமும் சேர்ப்

பிக்கப்படல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு சேர்ப்பிக்கப்படு மாயின், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக உரிய முறையில் சேர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப்படலும் வேண்டும். ".

31. முதன்மைச் சட்டவாக்கத்தின் 84 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படு கிறது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 84 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(அ) " அங்கீகரிக்கப்பட்ட பிணைப்பொறுப்புகள் " என்னும் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக் கணத்தை இடுவதன் மூலமும் :—

" அங்கீகரிக்கப்பட்ட பிணைப்பொறுப்புகள்" என்பது பின்வருவன எனப் பொருள்படும் :—

(அ) அரசாங்கப் பிணைப்பொறுப்புகள் ;

(ஆ) அரசாங்க உத்தரவாதமளிக்கப்பட்ட பிணைப்பொறுப் புகள் ;

(இ) உள்ளூரதிகாரசபை பிணைப்பொறுப்புகள் ;

(ஈ) அஞ்சலகச் சேமிப்பு வங்கிச் சான்றிதழ்கள் ;

(உ) இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் பங்குகள் ;

(ஊ) ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டத்திலான முதலீடுகள் ;

(எ) இலங்கை அரசாங்கமும் தனியட்ட ஆட்களும் கூட்டாகப் பங்குபற்றும் ஏதேனும் நிறுவனத் தின் சாதாரண பங்குகள், முந்துரிமை பங்குகள் அத்துடன் கடன் தொகுதிப் பத்திரங்கள்.

(ஆ) முறையே " இலங்கைக் காப்புறுதியாளர், "

" வெளிநாட்டுக் காப்புறுதிக் கம்பெனி ", அத்துடன்

" வெளிநாட்டுக் காப்புறுதியாளர் " என்னும் வரைவிலக்கணங்களை விட்டுவிடுவதன் மூலமும் ;

(இ) " அரசாங்கப் பிணைப்பொறுப்புகள்" என்னும் வரை விலக் கணத்திலுள்ள "எனப் பொருள்படும் ; ஆனால் நாணயத்தாளை உள்ளடக்காது" என்னும் சொற்களுக் குப் பதிலாக " எனப் பொருள்படுவதுடன், 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டதான தேசிய சேமிப்பு வங்கி யிலுள்ள வைப்புகளையும் உள்ளடக்குவதாகக் கருதப் படும் ; ஆனால் நாணயத்தாளை உள்ளடக்காது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

(ஈ) "காப்புறுதியாளர்" என்னும் வரைவிலக்கணத்துக்குப் பதி லாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :—

"காப்புறுதியாளர்" என்பது, இலங்கையில் அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டு, காப்புறுதித் தொழிலைக் கொண்டு நடத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்டதென்று இச்சட்டத்தின் கீழ் அப்போதைக்கு பதிவுசெய்யப்பட்டதான ஏதேனும் கம்பெனி என்று பொருளாவதுடன், நியமித்த தேதிக்கு முன்னர் (காப்புறுதித் தொழில் தொடர்பிலான பொறுப்பு, நியமித்த தேதியன்று செலுத்தப்படாதிருக்கும் அல்லது பொறுப்பு விடுவிக்கப்படாதிருக்கும்) அத்தொழிலைக் கொண்டு நடாத்தி, அல்லது அத் தொழிலைச் செய்து கொண்டு உள்ளவரான ஒரு தனியாளையும் அல்லது உள்ளதான கூட்டிணைக்கப்பட்ட குழுவையும் அல்லது கூட்டிணைக்கப்படாத குழுவையும் உள்ளடக்குவதாகக் கருதப்படுதலும் வேண்டும் ;

(உ) " முகாமையாளர் " என்னும் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :—

"தேசியக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் " என்பது, 1979 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க காப்புறுதி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையினால் தாபிக்கப்பட்ட தேசியக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் எனப் பொருள்படும்.".

(ஊ) "விதித்துரைக்கப்பட்ட " என்னும் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :—

" மீள்காப்புறுதி " என்பது, ஏதேனும் காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் அல்லது காப்புறுதிப் பத்திரத்தின் கீழ் உறப்பட்ட ஒரு காப்புறுதியாளரின் பொறுப்பினை இன்னொரு காப்புறுதியாளருக்கு அல்லது காப்புறுதியாளர்களுக்கு, கைமாற்றுதல் எனப் பொருள்படும்."

*முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏழாம் அட்டவணையைத் திருத்துதல்.*

32. முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏழாம் அட்டவணை இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணை இடம் பெறுகிறது :—

"ஏழாம் அட்டவணை (பிரிவு 75அ)

1. காப்புறுதித் தரகர் ஆனவர், உயர்தொழில் சார்ந்த கவனயீனத்துக்கு எதிராகக் கட்டுப்பாட்டாளரினால் குறித்துரைக்கப்பட வேண்டியதான தொகையொன்றுக்கு காப்புறுதிப் பத்திரமொன்றை வைத்திருத்தல் வேண்டும்.

2. காப்புறுதித் தரகர் ஆனவர், காப்புறுதித் தரகர் என்றவாறான அவரது கடமைகளுக்கும் ஏதேனும் செயற்பாடு அல்லது உயர்தொழில் தொடர்பான அவரது கடமைகளுக்குமிடையில் நலன் முரண்பாட்டினை விளைவிக்கக்கூடியதென கட்டுப்பாட்டாளர் அபிப்பிராயப்படும்படியான அத்தகைய செயற்பாட்டில் அல்லது உயர்தொழிலில் பங்குபற்றுவதற்கு உரித்துடையவராகமாட்டார்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் நவம்பர் மாதம் 30 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட **வேண்டும்.**